II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 6 of 2011**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 09.09.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sujatha B Pankaj | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

3ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை=

கூடுதல் ஆவணங்களை ஏன் முதலிலேயே தாக்கல் செய்யவில்லை என்றால் எனது முந்தைய வழக்கறிஞரிடம் கொடுத்திருந்தேன். அவர் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.8 என் தந்தை பெயரில் உள்ள Lease cum Sale agreement என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுதாரரான மனைவி ஷியாமளா பெயரில் பத்திரம் ஏற்படுத்திக்கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்றால் அவர் வாரிசுதாராகளில் ஒருவர் ஆவார். நாங்கள் சிறு குழந்தைகளாக இருந்ததால் அவரது பெயரில் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 17.01.2005ல் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்னரே ஏலம் விடப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. 1998ம் ஆண்டே 3ம் பிரதிவாதி அந்த சொத்தை கையகப்பட்டுத்திவிட்ட விவரம் எனக்குத் தெரியாது. அவர்கள் 8 முறை ஏலம் விட்டு பின்னர் 9 வது முறை ஏலம் விட்ட போது தான் நான்காம் பிரதிவாதி வழக்கு ஏ அட்டவணை சொத்தை ஏலத்தில் எடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. எங்கள் உறவினர்கள் சொத்து ஏலத்திற்கு வருவதாக அப்போது தான் சொன்னார்கள். அந்த உறவினர் 1ம் பிரதிவாதி தான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மற்றும் 10 செய்தி தாள்கள் பிரபலமானவை அல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண்.117/2012 வழக்கின்

தீர்ப்பு ஒருதலைப்பட்ச தீர்ப்பு என்றால் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு முதலில் அம்பத்தூர் நீதிமன்றத்தில் 68/2005 என்று நிலுவையில் இருந்தது என்றால் வழக்கின் எண் எனக்கு தெரியாது. ஆனால் அந்த வழக்கு தள்ளுபடியாகி திருவள்ளூருக்கு போனது என்று தெரிந்து கொண்டேன். அ.வ.எண்.117/2012 வழக்கை நானும் 2ம் பிரதிவாதியும் இணைந்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கின் ஏ அட்டவணை சொத்தை 17.11.2004 அன்று 4ம் பிரதிவாதி ஏலத்தில் எடுத்துவிட்டதாலும், அதுபோல் பி அட்டவணை சொத்து 29.12.2004 அன்று ஏலத்திற்கு விடப்பட்டுவிட்டதாலும் அவர்கள் அ.வ.எண்.117/2012 வழக்கை நடந்தவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். எனவே 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்து குறித்து நாங்கள் உரிமை எதுவும் கோர முடியாது என்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை=

4ம் பிரதிவாதி சட்டப்படியாக சொத்தை ஏலத்தில் எடுத்து இன்றுவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனவே அ.வ.எண்.117/2012 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்பாணை 4ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.